உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## பேச்சு

### கீழ்ப் பிரிவு (தரம்1,2)

# சின்னத்தம்பிப் புலவர்

யாழ்ப்பாணத்து நல்லூரில் வில்லவராய முதலியார் வாழ்ந்தார்.

ஒருநாள் அவருடைய வீட்டைத் தேடி ஓர் அறிஞர் வந்தார்.

அறிஞரால் முதலியாரின் வீட்டை அடையாளம் காண முடியவில்லை.

அக்கம் பக்கத்தில் கேட்டறிய நினைத்தார்.

ஆனால் ஒருவரும் தென்படவில்லை.

தூரத்ததில் சிறுவர் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களிடம் சென்ற அறிஞர் வில்லவராய முதலியார் வீடு எங்கே உள்ளது எனக்கேட்டார்.

அப்போது சிறுவன் "பொன் பூச்சொரியும்" என்னும் பாடல் மூலம் வீட்டை அறிமுகம் செய்தான்.

அறிஞர் சிறுவனைப் பாராட்டினார்.

அறிஞர் பாராட்டிய சிறுவன்தான் சின்னத்தம்பிப் புலவராகப் புகழ் பெற்றார்.